# மொழிபெயர்ப்பு

நீங்கள் பாசல் மாநிலத்துக்கு புதியவராக இருந்து ஜேர்மன் மொழி இன்னும் சரியாகப் பேசத் தெரியாதவரா? அதிகாரிகளுக்கரன ஆவணங்களையோ? ஆலோசனை தேவைகளின்போதோ அல்லது மருத்துவதேவைக்கோ மொழிபெயர்ப்புகள் தேவைப்பட்டால் இரு மாநிலங்களுக்கும் எண்ணுக்கணக்கற்ற வாய் மூல எழுத்துமூல மொழிபெயர்ப்பு வாய்ப்புகள் உள்ளன. உதாரணமாக GGG Migration, das Heks – Linguadukt beider Basel und Nationalen Telefon dolmetschdienst.

பன்மொழிகளிலுமான மொழிபெயர்ப்பாளர்கள் மிக முக்கியமான வேலையை செய்கின்றார்கள். சுவிற்சர்லாந்தில் பல்கலாச்சார மொழிபெயர்ப்பு கற்கைளை கற்க அனுமதிக்கப்படுகின்றார்கள். குடியேற்றவாசிகள் அனுபவங்களுடாக பல்வேறு சூழ்நிலைகளிலும் இரு கலாச்சாரபிரிவுகளுக்கும் இடையேயான தொடர்பாளராக செயற்படுவது.

GGG Migration தனியாருக்கான ஆவண மொழிபெயர்ப்புகளையும் மேற்கொள்கின்றது. அதிகாரிகளுக்கான மற்றும் அமைப்புகளுக்கானவற்றுக்கு குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கின்றது. மாநில ஆளுநரின் நம்பிக்கைக்குரியதும் மாநிலத் திணைக்களங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தினால் நன்கு அறியப்பட்டதுமான மொழிபெயர்ப்பு சேவை இதுவாகும்.

Der Ausländerdienst Baselland ALD Pratteln பகுதியில் எழுத்து மூலமான மொழிபெயர்ப்புக்களை மிகக் குறைந்த கட்டணத்தில் 60மொழிகளில் செய்து தருகின்றது இவர்கள் மாநில திணைக்களத்தால் நன்கு அறிப்பட்டவர்கள்.

das Heks – Linguadukt beider Basel இன் மொழிபெயர்ப்பு சேவையானது உரையாடல் மொழிபெயர்ப்பினை மேற்கொள்கின்றது. குறைந்தளவு ஜேர்மன்மொழியறிவை கொண்ட குடியேற்றவாசிகளுக்கு ஆரோக்கியம், கல்வி, சமூகம் போன்ற துறைகளான மொழிபெயர்ப்பினை அந்தந்த துறைகளுக்கான முறைப்படிபயின்ற வல்லுனர்களுடாக முன்னெடுக்கின்றது. மருத்துவதேவைக்கோ அல்லது பாடசாலைகளில் நடைபெறும் பெற்றோர் சந்திப்புக்களுக்கோ அல்லது அலுவலக தேவைக்கோ.

அதேபோல் குறுகிய நேரத்துக்கான சுலபமான Nationalen Telefon dolmetschdienst. எனும் மொழிபெயர்ப்பு சேவையும் உள்ளது. எந்த நேரமும் 15 மொழிகளிலான மொழிபெயர்ப்பினை தொலைபேசி சேவையினூடாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கட்டணம் நிமிடத்திற்கு 3 sfr. தொலைபேசி மொழிபெயர்ப்பாளர் சேவையானது அவசரதேவைகளுக்கு பயன்படுத்தக் கூடிய உத்தரவாதமானது. உடனடியாக பயன்படுத்தக்கூடிய இத்தரமான சேவையின் தேசியமொழிபெயர்ப்பாளர் சேவையின் தொலைபேசி இல 0842 442 442.